


அரியலூர் மாவட்ட இளைஞரணியின் சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடுவது குறித்து ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், உரையாற்றினார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீர.சிவா, எஸ்.ஆர்.முருகேசன், ச.வசந்த் பகலவன், குணசீலன், சோ.ப.தர்மராஜ், தமிழ்மாறன்,மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில்

# கிராமம், கிராமமாக எ.வ.வேலு நன்றி தெரிவித்தார்!

## பொதுமக்கள் சால்வைகள் அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் வரவேற்பு!

திருவண்ணாமலை,ஜூன்1-

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில், முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் மூன்றாவது நாளாக, கிராமம், கிராமமாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார். பொதுமக்கள் சால்வைகள் அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் வரவேற்றனர்.

29.05.2026 வெள்ளிக்கிழமை மாலை 5.00மணிக்கு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராக போட்டியிட்டு, வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்தில் கிராமம், கிராமமாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை 5.00மணி முதல் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவண்ணாமலை ஒன்றியத்தில் உள்ள நல்லாண்பிள்ளைபெற்றாள், பள்ளிகொண்டாப்பட்டு, ஏந்தல், எடப்பாளையம், தென்மாத்தூர், உடையானந்தல், அழகானந்தல், கண்ணப்பந்தல், கொளக்குடி, நடுப்பட்டு, சு.ஆண்டாப்பட்டு, அரடாப்பட்டு, பவித்திரம்உள்ளிட்ட கிராமங்களில் 4வது நாளாக வீதி, வீதியாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

ஒவ்வொரு கிராமங்களிலும், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு மேள, தாளம் முழங்க பட்டாசுகள் வெடித்தும், சால்வைகள் அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் பொதுமக்கள் வரவேற்றனர்.

நன்றி அறிவிப்பு நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், தொ.மு.ச. மாநில செயலாளர் க.சௌந்தர ராசன், கலைவாணிகலைமணி, மாவட்ட அமைப்பாளர்கள் சி.பி.பாலமுரளி கிருஷ்ணா, க.கங்காதரன், கோ.நடராஜன், சி.ரவி, வழக்கறிஞர் கோ.கண்ணன், கோ. தனஞ்செழியன், செல்வராஜ், வே.காசிநாதன், கொளக்குடி பழனி, ரே.வெங்கடேசன், காத்தமுத்து, ரங்கராஜ், தங்கராஜ் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், கூட்டணி இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நடிகர் - நண்பர் அஜித்குமார் தாயார் மறைவு!

## உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூன்1-**

**நடிகர் அஜித்குமார் அவர்களின் தாயார் மறைவுக்கு தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**

நடிகரும் நண்பருமான அஜித்குமார் அவர்களுடைய அன்பு தாயார் திருமதி மோகினி மணி அம்மையார் அவர்கள் மறைந்த செய்திக் கேட்டு வருத்தமுற்றேன்.

அஜித் அவர்கள், வாழ்வில் பல்வேறு உயரங்களைத் தொட உறுதுணையாகஇருந்தவர்அவருடைய தாயார்.

அவரை இழந்து வாடும் நண்பர் அஜித் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கழக சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவினை வெகு விமரிசையாக கொண்டாடுவோம்!

## மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!



சென்னை, ஜூன்1-


சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர் கழகத்தலைவர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் அவர்களின் ஆலோசனையின்படியும் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அவர்களின் தலைமையில் அண்ணா அறிவாலயம் முரசொலி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில துணை தலைவர் வி.ஜோசப்ராஜ், மாநில துணைச் செயலாளர்கள் என்.பி.எம்.சேக் அப்துல்லா, வேலூர் என்.நூருல்லா, ஒசூர் விஜயகுமார், கா.ரபி அகமது, துபாய் கே. அன்வர் அலி, இராபர்ட் இராஜதுரை மற்றும் ஷேக் இஸ்மாயில் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

ஜூன் 3 தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவரக்ளின் பிறந்த நாளை கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுதல் மற்றும் பள்ளி, கல்லூரிகள் திறக்கவுள்ள நிலையில் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் கல்வி உதவித்தொகை வழங்குதல், உள்ளிட்ட எளியோர் பயன்பெறும் நிகழ்ச்சிகளை நடத்தி பிறந்தநாள் விழாவினை சிறப்புடன் கொண்டாட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### நாகை மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை

# கழகக் கொடி ஏற்றி, நல உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!



நாகை, ஜூன் 1-

நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

உலக தமிழர்களின் நெஞ்சங்களில் மறைந்தும், மறையாமல் வாழ்ந்துகொண்டிருக்கிற தமிழனத்தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற தேர்தலில் 13முறை தொடர் வெற்றி பெற்று 5 முறை தமிழ்நாடு முதலமைச்சர், 50 ஆண்டுகளுக்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழக தலைவர் என அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்த முத்தமிழ் அறிஞர் கலைஞர்

கலைஞர் அவர்கள் வாழ்ந்த போது மண், மனிதன் தோன்றிய காலத்தில் தோன்றிய தமிழ் மொழிக்கு செம்மொழி என்ற அந்தஸ்தை பெற்று தந்தும், காவிரி பிரச்சனைக்கு தீர்வு காண நடுவர் மன்றம் அமைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நாகை மாவட்டம் திருக்குவளையில் பிறந்து இன்று தமிழகம் மட்டுமல்லாது உலக அளவில் இலக்கியம், கலைத் துறை, அரசியல் என்று பன்முகம் கொண்ட தலைவராகவும், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், விவசாய கடன் ரூ.7 ஆயிரம் கோடி தள்ளுபடி செய்து விவசாயிகளி வாழ்வில் ஒலி ஏற்றிய, தமிழுக்கும், தமிழ் மொழிக்கும் பாதுகாவலராக இருந்தும், பல பிரதமர்கள், குடியரசு தலைவர்களை உருவாக்கிய பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக விளங்கிய தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் ஜூன் 3ம் தேதி மற்றும் ஜூன் மாதம் முழுவதும் சிறப்பாக கொண்டாடும் வகையில் நாகை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து கிளை, வார்டுகளில் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், மரக்கன்றுகளை நட்டும்,வாங்கியும், ஏழை எளியவர்களுக்கு நல உதவிகள் வழங்கியும், பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் நடத்தியும் சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சி யில் அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும்.

இவ்வாறு தனது அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் ககூறியிள்ளார்.

### அமைச்சரின் திருப்பரங்குன்றம் தொகுதியில்

# மூடப்பட்ட டாஸ்மாக் கடை மீண்டும் திறப்பு!

## பொதுமக்கள் அதிர்ச்சி!

மதுரை, ஜூன்1-

மதுரை திருப்பரங்குன்றத்தில் மூடப்பட்ட டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டதால் பொது மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பாரின் உரிமையாளர் த.வெ.க.வைத் சேர்ந்தவர் என்பதே டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டதற்கு காரணம் என பொது மக்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

திருப்பரங்குன்றம் காவல் நிலையம், திருப்பரங்குன்றம் பேருந்து நிலையம், உயர்நிலைப் பள்ளி, அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் டாஸ்மாக் கடைகள் இயங்கி வந்தன. வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கு அருகே செயல்பட்டு வரும் மதுபான கடைகளை மூட அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து இந்த 3 கடைகளும் அண்மையில் மூடப்பட்டன.

இந்நிலையில், 5556 எண் கொண்ட டாஸ்மார்க் கடை 2 நாட்களுக்கு முன் மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. திருப்பரங்குன்றம் கோயிலுக்குச் சொந்தமான ஸ்ரீ ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் இந்த டாஸ்மாக்கை கடந்துதான் சென்று வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள், பாரின் உரிமையாளர் த.வெ.க.வைத் சேர்ந்தவர் என்பதே டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டதற்கு காரணம் என்று குற்றம்சாட்டுகின்றனர்.

அமைச்சர் நிர்மல் குமாரின் தொகுதியில், மூடப்பட்ட டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளது.

### நெல்லை, தென்காசி மாவட்டங்களில்

# ஒரே நாளில் 8 பேருக்கு அரிவாள் வெட்டு!

## த.வெ.க. ஆட்சியில் போதை கும்பல் வெறிச்செயல்!

தென்காசி, ஜூன்1-

தென்காசியில் வெறிச்செயலில் ஈடுபட்ட போதை கும்பலை போலீசார் கைது செய்தனர். குற்றவாளிகளை போலீசார் துரத்தி பிடிக்கும் ட்ரோன் காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் திருமண நிகழ்வுக்காக மணமகன் வீட்டின் அருகே பேனர் வைக்கப்பட்டது. அப்போது மதுபோதையில் வந்த இளைஞர் ஒருவர் மணமகனின் வீட்டாருடன் தகராறில் ஈடுபட்டார். இந்நிலையில் 3 இருசக்கர வாகனங்களில் முகமூடி அணிந்த 8 பேர் கொண்ட கும்பல் கையில் அரிவாள்களுடன் திருமண வீட்டுக்குள் புகுந்து, அங்கிருந்தவர்களை சரமாரியாக வெட்டினர். மேலும், அந்த கும்பல் தெருவோரம் நிறுத்தப்பட்டிருந்த கார், இருசக்கர வாகனங்களை அடித்து நொறுக்கியதோடு அங்கிருந்த கடையையும் சூறையாடிவிட்டு தப்பிச் சென்றனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த ஆலங்குளம் போலீசார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களை ஆய்வு செய்த போது அதில் மூன்று சிறுவர்கள் உள்பட 8 பேர் கும்பல் நம்பர் பிளேட் இல்லாத பைக்குகளில் வந்து சென்றது தெரியவந்தது. மர்ம நபர்கள் வெட்டியதில் படுகாயம் அடைந்த 4 பேர் நெல்லை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதனிடையே மர்ம நபர்களை கைது செய்ய வலியுறுத்தி ஆலங்குளம்ரெட்டியார்பட்டி சாலையில் பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**தெற்குப்பட்டி, நெல்லை**

இதனிடையே நெல்லை அருகே மானூரை அடுத்த தெற்குப்பட்டி கிராமத்தில் அதே கும்பல் இரவு புகுந்து அப்பகுதியை சேர்ந்த அப்துல் ரகுமான், முபாரக் ஆகியோரை வெட்டி விட்டு தப்பி சென்றனர். இவர்களும் நெல்லை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரே நாளில் 8 பேர் அரிவாளால் வெட்டுப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக 3 சிறுவர்கள் உட்பட 8 பேரை போலீசார் கைது செய்தனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாள்!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் கழக கொடி ஏற்றி நல உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!



மயிலாடுதுறை, ஜூன்1-

மயிலாடுதுறைமாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்ற தேர்தலில் 13முறை தொடர் வெற்றி பெற்று சாதனை படைத்து, 5 முறை தமிழ்நாடு முதலமைச்சர் 50 ஆண்டுகளுக்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழக தலைவர் என அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த போது மண், மனிதன் தோன்றிய காலத்தில் தோன்றிய தமிழ் மொழிக்கு செம்மொழி என்ற அந்தஸ்தை பெற்று கொடுத்து, தமிழ் மொழி காத்த உலக தமிழர்களின் நெஞ்சங்களில் மறைந்தும் மறையாமல் வாழ்ந்துகொண்டிருக்கிற தமிழனத்தலைவர், காவிரி பிரச்சனைக்கு தீர்வு காண நடுவர் மன்றம் அமைத்த தலைவர் கலைஞர் அவர்கள் நாகை மாவட்டம் திருக்குவளையில் பிறந்து இன்று இலக்கியம், கலைத்துறை, அரசியல் என்று பன்முகம் கொண்ட தலைவராகவும், பல பிரதமர்கள், குடியரசு தலைவர்களை உருவாக்கிய பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக விளங்கிய தலைவர் கலைஞர் கீயூபா நாட்டின் அதிபர் பிடல்காஸ்டோ என்ற மாபெரும் தலைவரை பற்றி தமிழில் எழுதிய கவிதையை அறிந்த பிடல்காஸ்டோ அவரது தாய் மொழியில் மொழி பெயர்த்து தனது மேசையில் வைத்து தினம் தோறும் அந்த கவிதையை வாசித்து பொருமைப்பட்டு கொள்ளும் அளவிற்கு கவிதை தீட்டி உலக ஆவில் பெயர் பெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் ஜூன் 3ம் தேதி மற்றும் ஜூன் மாதம் முழுவதும் சிறப்பாக கொண்டாடும் வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து கிளை வார்டுகளில் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், மரக்கன்றுகளை நட்டும், வாங்கியும், ஏழை எளியவர்களுக்கு நல உதவிகள் வழங்கியும், பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் நடத்தியும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும்.

இவ்வாறு தனது அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

# த.வெ.க.வின் குதிரைபேரம் குறித்து விசாரணை நடத்த வேண்டும்!

## ஆளுநரிடம் புகார் மனு!

சென்னை, ஜூன்1-

த.வெ.க. ஆட்சியில் நடைபெற்ற குதிரைபேரம் குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி அ.தி.மு.க. சார்பில் ஆளுநரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்திய பாமா, இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களின் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தனர். அதனைத்தொடர்ந்து, சில நிமிடங்களில் அவர்கள் அனைவரும் த.வெ.க.வில் இணைந்தனர். அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விவகாரத்தில் குதிரை பேரம் நடந்துள்ளதாகவும், இது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் எனக்கோரி தேர்தல் ஆணையத்திடம் மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அ.தி.மு.க. கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தனபால் ஆகியோர் ஆளுநர் அர்லேகரை சந்தித்து மனு அளித்தனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அக்ரி கிருஷ்ணமூர்த்தி, த.வெ.க. வின் குதிரை பேர அரசியலை தடுத்து நிறுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் வலியுறுத்தியதாகத் தெரிவித்தார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் இலத்தூர் ஊராட்சி ஒன்றியம் வீரபோகம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஏ.வரதன் அவர்களின் தாயாரும். ஒன்றிய குழு உறுப்பினருமான திருமதி. பர்வதம் அம்மாள் இயற்கை எய்தினார். அம்மையார் உடலுக்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.அரசு. பனையூர் பாபு ஒன்றிய கழக செயலாளர் எம்.எஸ். பாபு, ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.மணி, கா.அர்ஜுனன், ஜே.மகா கணபதி, ஆர் பன்னீர்செல்வம், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் ஜி.எம். முனுசாமி, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் அருண் மொழி வர்மன், ஒன்றிய வர்த்தக அணி எம்.எ.தம்பிதுரை, ஒன்றிய தொண்டர் அணி கோபிநாத் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.